# சங்க இலக்கிய அகப்பாடல்களில் வரலாற்றுச் செய்திகள்

**ச.பிரிசில்லா**

**உதவிப் பேராசிரியர்(தமிழ்)**

**ஜே.எ.எஸ் கல்வியியல் கல்லூரி**

**கோயம்புத்தூர்.**

71

பண்டைக்காலத்தில் வாழ்ந்த தமிழ்ப்புலவர்கள் என்றும் அழியாத தமிழ்இலக்கியங்களை இயற்றி பல நல்ல கருத்துகளை வெளியிட்டுள்ளனர் .தமிழில் உள்ளஇலக்கியங்களில் மிகவும் பழமையானவை சங்க இலக்கியங்கள் ஆகும் .இலக்கியத் முந்தியதாகத் தமிழில் கிடைத்த நூல் தொல்காப்பியம் என்னும்இலக்கண நூல் மட்டுமே சங்க இலக்கியங்களில் உள்ள பாடல்கள் பல . புலவர்களால்பாடப்பட்டவை .சங்க இலக்கியத்தின் உயிர்நாடியாக விளங்குபவது காதலும் வீரமுமே ஆகும் .இப்பாடல்கள் பழந்தமிழகத்தின் வரலாற்றுக் களஞ்சியமாகத்திகழ்கின்றன .பல்வேறு சிறப்புகளைத் தன்னகத்தேகொண்ட இவை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நிலைபெற்ற வாழ்வினைப் பெற்றுதனித் தன்மையோடு விளங்கி வருகின்றன . சங்க .காலத்தைத் தமிழிலக்கிய வரலாற்றில் ஒரு பொற்காலம் என்றே சொல்லலாம்.

சங்க இலக்கியத்தின் சிறப்புப் பிரிவுகள்

சங்க இலக்கியங்களை அகம் , புறம் என்றுபிரிப்பர். காதலைப் பற்றிப் பாடும் பாடல்களை அகம் என்றும், காதல் தவிர , பிறசெய்திகளைப் பாடும் பாடல்களைப் புறம் என்றும் கூறுவர். இதற்கானஇலக்கணத்தைத் தொல்காப்பியம் கூறுகிறது. அகப்பாடல்கள் கற்பனையான தலைவன்தலைவியின் காதலைப்பற்றி விளக்கியுரைக்கின்றன. புறப்பாடல்கள் நாட்டை ஆளும்அரசனின் வீரம்கொடைசமூகத்திற்கு அரசன் ஆற்ற வேண்டிய கடமைகள் , கல்வியின்சிறப்பு போன்றவற்றைக் கூறுகின்றன. பெரும்பாலான புறப்பாடல்கள் அரசனின்புகழைப் பாடுவனவாகவே உள்ளன. பூம்புகார் , உறையூர்மதுரைவஞ்சி போன்றநகரங்களைத் தவிரபெரும்பாலும் சிற்றூர்களே அக்காலத்தில் இருந்தமையால்மக்கள் இயற்கையோடு இயைந்த சீரிய வாழ்க்கையை வாழ்ந்ததைச் சங்க இலக்கியங்கள்கூறுகின்றன.

அகப்பாடல்கள்

ஒருவனும் ஒருத்தியும் தமக்குள்ளே கண்டுகாதலிப்பதுகாதலைத் தோழி மூலம் செவிலித்தாய் , நற்றாய் ஆகியோருக்கு மெல்லத்தெரியப்படுத்துவதும் அக்காலத்தில் வழக்கத்தில் இருந்துள்ளன. இவ்வாறுகாதலைத் தெரியப்படுத்துவதற்கு அறத்தொடு நிற்றல் என்ற பெயரும் உண்டு.பெற்றோர் திருமணத்திற்கு ஒத்துக் கொள்ளாத சூழலில் காதலனும் காதலியும் ஊரைவிட்டு வெளியூர் சென்று விடுதல் உண்டு. இதற்கு உடன்போக்கு என்று பெயர்.அக்காலத்தில் காதலித்த பெண்ணை மணந்து அவளோடு இன்பத்துடன் வாழ்ந்து வரும்தலைமகன் வேறு பெண்களை நாடிச் செல்வதும் வழக்கமாக இருந்திருக்கிறது.இதற்குப் பரத்தையிற் பிரிவு என்று பெயர். அதனால் தலைவி அவனிடம் சினம்கொண்டு ஊடல் கொள்ளுதலும் பழக்கமாக இருந்துள்ளது. அகப்பாடல்கள் பெரும்பாலும்கற்பனைப் பாடல்களாக இருந்தாலும்அக்கால மக்களின் காதல் வாழ்க்கையைமுழுமையாகவே வெளிப்படுத்துகின்றன.

புறப்பாடல்கள்

புறப்பாடல்கள் பெரும்பாலும் கற்பனையாகப்பாடப்படவில்லை இரு அரசர்களுக்கிடையே . அரசன் மக்களிடம் . போர் ஏற்படும் போது புலவர்கள்தலையிட்டுப் போரைத் தடுத்துள்ளனர் அளவுக்கதிகமாக வரிவாங்கும் நேரத்தில் புலவர்கள் தலையிட்டு அரசனுக்கு அறிவுரை



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

புற . இந்நிகழ்வுகள் புறப்பாடல்களில் இடம்பெற்றுள்ளன.கூறியுள்ளனர்ப்பாடல்களில் இயற்கைக்குமீறிய செய்திகள் கூறப்படவில்லை சங்க கால வரலாற்றைத் . அரசர்கள் தமக்குள் . தொகுப்பதற்குசங்கப்புறப்பாடல்கள் ஓரளவுக்குத் துணை நிற்கின்றன . போரிட்டுக்கொண்டாலும் புலவர்களைப் பெரிதும் மதித்துள்ளனர்

சங்க இலக்கிய அகப்பாடல்களில் உள்ள வரலாற்றுச் செய்திகள்

சங்கஇலக்கியம் என்று அறிஞர்களால் தொகுக்கப்பட்ட பாடல்கள் பத்துப்பாட்டும்எட்டுத்தொகையும் ஆகும் இவற்றுள் எட்டுத்தொகைத் தொகுப்பில் உள்ள . நற்றிணை,குறுந்தொகை ஐங்குறு நூறுகலித்தொகை அகநானூறு ஆகிய ஐந்து பாடல்கள் மற்றும்பத்துப்பாட்டுத் தொகுக்கிலுள்ள குறிஞ்சிப்பாட்டுமுல்லைப்பாட்டு ஆகிய இரண்டு பாடல்களும்அகப்பாடல்கள். பின்வரும் ஒவ்வொரு அகப்பாடல்களின் வரலாற்றுச் செய்திகளை இக்கட்டுரையில் தெளிவாக அறிந்து கொள்ளலாம்

நற்றிணை

சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை நூல்களில் முதலாவதாகஅமைந்துள்ள நற்றிணை என்னும் நூல் நல்லொழுக்கம் என்னும் பொருளில் அமைந்து , ‘நல்’என்னும் அடைமொழியினையும்நற்றிணை நானூறு என்னும் சிறப்புப் பெயரையும் கொண்டு ஆகச்சிறந்த நூலாக விளங்குகிறது. 9 அடி முதல் 12 அடிகள் வரையிலான 400 பாடல்களைக் கொண்டு அமைந்துள்ளது. நற்றிணையில் அமைந்துள்ள பாடல்கள் யாவும் சுவைமிகு அகப்பொருள் பாடல்களாக இடம்பெற்றுள்ளது நெஞ்சினிக்கும் நிறைவு . இவற்றில் ஒரு பாடல்

சிலரும்பலரும்கடைக்கண்நோக்கி
மூக்கின்உச்சிச்சுட்டுவிரல்சேர்த்தி
மறுகில்பெண்டிர்அம்பல்தூற்ற
சிறுகோல்வலந்தனள்அன்னைஅலைப்ப
அலந்தனென்வாழிதோழிகானல்
புதுமலர்தீண்டியபூநாறுகுரூஉச்சுவல்
கடுமான்பரியகதழ்பரிகடைஇ
நடுநாள்வரூஉம்இயல்தேர்க்கொண்கனொடு
செலவுஅயர்ந்திசினால்யானே
அலர்சுமந்துஒழிகஇவ்அழுங்கல்ஊரே(நற்றிணை–149)

தலைவன் மீது தலைவி காதல் கொள்கிறாள் ஊரார் தலைவியைப் பற்றி அவர் தூற்றுகின்றனர். பெண்கள் தம் வலக்கையின் சுட்டு விரல், மூக்கில்பட உள்ளங்கையை வாயருகே குவித்து பிறரிடம் தலைவியைப் பற்றிப் பேசுகின்றனர். தாய் சிறிய கோலைக் கையில் பிடித்துக்கொண்டு ஓட ஓட என்னைஅடிக்கிறாள். இதனால் நான் நொந்துபோய்க் கிடக்கிறேன். தோழி, இதைக் கேள்.நள்ளிரவில் அவர் தேரில் வருவார். அவருடன்நான் சென்றுவிடுவேன். இந்த ஊர் அலர் பேசிப் பேசி அழுது தொலையட்டும்.இவ்வாறு தலைவி தோழியிடம்கூறுவதாக நற்றிணை பாடல் அமைந்துள்ளது .

**குறுந்தொகை**

நல்ல குறுந்தொகை என்னும் அடைமொழிக்கு உரிய நூல். குறுகிய அடிகளை உடையதால் குறுந்தொகை என்பெயர் பெற்றது. குறுந்தொகை நானூறு எனும் பெயர் பெறும் இப்பெயர் வழக்கு இறையனார் களவியல் உரையால் அறியப்பெறுகிறது. தலைவி ஒருத்தி தலைவன் மீது நிலையான அன்பு கொண்டிருக்கிறாள் தான் தலைவன் மீது கொண்ட அன்பின் திறத்தைத் தோழிக்கு எடுத்துரைக்கின்றாள். இந்த குறுந்தொகை பாடல் கூறும் செய்தியாவது,

நிலத்தினும்பெரிதேவானினும்உயர்ந்தன்று
நீரினும்ஆரளவின்றேசாரல்

கருங்கோற்குறிஞ்சிப்பூக்கொண்டு
பெருந்தேன்இழைக்கும்நாடனொடுநட்பே (குறுந்தொகை –3)

மலைப் பக்கத்தில் உள்ளகரிய கொம்புகளை உடைய குறிஞ்சி மரத்தின் மலர்களைக் கொண்டு , பெருமளவில் வண்டுகள் தேனைச் செய்தற்கு ஏற்ற இடமாகிய நாட்டை உடைய தலைவனோடு எனக்குடைய நட்புபூமியைக் காட்டிலும் பெரியது ; ஆகாயத்தைக் காட்டிலும் உயர்ந்தது ; கடலைக் காட்டிலும் அளத்தற்கரிய ஆழம் உடையது என்ற தலைவி கூற்று மூலம் அறியலாம்.

**ஐங்குநூறு**

ஐந்து நூறு நூறு பாடல்களால் ஆனது. குறுகிய வடிவம் உடையது. எனவே, ஐங்குநூறு எனப்பெயர் பெற்றது. ஐங்கு நூற்றில் ஒவ்வொரு திணைக்கும் நூறு நூறு பாடல்கள் என்னும் விதத்தில் நூல் வரன்முறைப் படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு நூறும் பத்துப் பாடல்கள் எனப் பத்துப் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பத்துப் பாடல்களின் தலைப்பும் "பத்து" என்றே முடிகிறது.
செல்வச்செழிப்பு மிக்க குடும்பத்தைச் சேர்ந்தவர் தலைவி, தலைவனை மணந்தபிறகு வறுமை நிலைக்குத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்கிறார். மான் உண்ட எச்சில் நீர் கூட மேலானது. தாய் வீட்டுத் தேன் கலந்த பாலும் கூட அவ்வளவு இனிமையானதன்று என்கின்றாள். இக்காட்சியை

அன்னாய் வாழிவேன் டன்னைநம் படப்பை
தேன்மயங்கு பாலினும் இனிய அவர் நாட்டு
உவலைக் கூவற் கழ
மான் ண்டு எஞ்சிய கலிழிநரே
என்னும் பகுதி சித்தரிக்கின்றது.(ஐங்குநூறு 1:1)

**கலித்தொகை**

பாவகையால் பெயர் பெற்ற தொகை நூல்கள் இரண்டு. கலித்தொகை, பரிபாட்டு என்னும் இரு பாவகைகளில் மட்டுமே பாடப்பெறும் என்பது தொல்காப்பிய விதி இதனை,
பாடல் சான்ற புலன்நெறி வழக்கம்
கலியே பரிபாடல் ஆயிரு பாவினும்
உரிய தாகும் என்மனார் புலவர் (அகத்திணையியல் : 35)

என்னும் நூற்பா குறிக்கும். தொல்காப்பிய இலக்கண விதிப்படி.கலிப்பாவால் அகத்திணையைப் பாடும் ஒரே எட்டுத்தொகை நூல் கலித்தொகை மட்டுமே. கலித்தொகையின் பாடல்கள் பல ஓரங்க நாடகம் போன்ற அமைப்பினைக் கொண்டுள்ளது. ''சுடர்த்தொடீஇ கோளாய்" எனத் தொடங்கும் பாடல், ஓரங்க நாடகப் பாங்கில் தலைவி தன் தோழியிடம் பேசும் முறையில் அமைந்துள்ளது.

பெண்கள் பிறந்த வீட்டுக்கு உரியவர் அல்லர் என்னும் சிந்தனையைக் கலித்தொகை கூறுகிறது. சந்தனம், முத்து, இசை இவை மூன்றும் மலை, கடல், யாழ் என்னும் இடங்களில் பிறக்கின்றன. ஆயினும் தாம் பிறந்த இடத்திற்குப் பயன்படுவதில்லை. அவற்றைப் பயன்படுத்துவோர்க்கே உரியன. நம் மகளும் நமக்கு அத்தகையோளே' என்று வரும் பகுதி அமைந்துள்ளது.

**அகநானூறு**

நூலின் பெயரிலேயே “ அகம்” எனப்பட்டது. இந்நூல் மட்டுமே அகத்திணை பற்றி நானூறு பாடல்களில் ஆனதால் அகநானூறு எனப்பெயர் பெற்றது.

அகநானூற்றின் 265 ஆம் பாடலில்

‘பல்புகழ் நிறைந்த வெல்போர்நந்தர்
சீர்மிகு பாடலி குழீஇக் கங்கை
நீர்முதல் கரந்த நிதியம் கொல்லோ’ (மாமூலனார் - 265)

என்று பாடலிபுரம் என்னும்தற்பொழுதைய பாட்னாவில் நிகழ்ந்த ஒரு வரலாற்று நிகழ்வைக் குறிப்பிடுகிறது. தலைவியைப்பிரிந்து தலைவன் சேர்க்க எண்ணிய பெரும்பொருள்முன்பு கங்கையில் மறைத்து வைக்கப்பட்டுபின்னர் காணாது போய்விட்ட பாடலிபுரத்தின் நந்தர்களின் பெரும்பொருளுக்கு நிகராகுமோ என்றுதலைவி கேட்பதாக அமைந்தது அப்பாடல். பொருளின் நிலையாமையை உணர்த்துவது போன்றும் நிலையில்லாததும்அழியக் கூடியதுமான பொருளை விரும்பி நம்மைப் பிரிந்து சென்ற தலைவனின் செயலை நியாமற்றதுஎன்று தலைவி கூறுதல் இன்புறத் தக்கது. நந்தர்களின் பெரு நிதியம் பற்றிய குறிப்புகள்பல சங்கப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன. ‘நந்தன் வெறுக்கை எய்தினும் மற்று அவண் தங்கலர்’ என்பது அகநானூற்றின் 251 ஆம் பாடல்.

குறிஞ்சிப்பாட்டு

புலவர் கபிலர்பிரகத்தன் என்ற ஆரிய மன்னனுக்குதமிழரின் களவுஒழுக்கத்தைப் பற்றியும் கற்பு ஒழுக்கத்தைப் பற்றியும் விவரிக்கும் பாட்டுகுறிஞ்சிப்பாட்டு . குறிஞ்சிப்பாட்டு என்ற பெயர் குறிஞ்சித் திணையைப்பற்றிய பாடல் . அகத்திணையில் களவு ஒழுக்கம் , கற்பு ஒழுக்கம் என்ற இரண்டு பிரிவுகள் உண்டு.இவ்விரண்டையும் இணைத்து நிற்பது அறத்தொடு நிற்றலாகும் தலைவியின் களவு .ஒழுக்கத்தை வெளிப்படுத்துதல் அறத்தொடு நிற்றல் ஆகும் . தலைவிதோழிசெவிலித்தாய்நற்றாய் ஆகியவர்கள் அறத்தொடு நிற்பதுண்டு. அறத்தொடுநிற்றலின் விளைவு , தலைவியை அவள் விரும்பிய தலைவனுடன் கற்பு வாழ்க்கையில்இணைப்பதாகும் . தலைவியைத் தலைவனுக்குத் திருமணம் செய்வித்தல் ஆகும் .

இதனை

முத்தினும்மணியினும்பொன்னினும்அத்துணை
நேர்வருங்குரையகலங்கெடின்புணரும்
சால்பும்வியப்பும்இயல்பும்குன்றின்
மாசறக்கழீஇவயங்குபுகழ்நிறுத்தல்
ஆசறுகாட்சிஐயர்க்கும்அந்நிலை
எளியஎன்னார்தொல்மருங்குஅறிஞர்
மாதரும்மடனும்ஓராங்குத்தணப்ப
நெடுந்தேர்எந்தைஅருங்கடிநீவி
இருவேம்ஆய்ந்தமன்றல்இதுவென
நாம்அறிஉறாலின்பழியும்உண்டோ
ஆற்றின்வாரார்ஆயினும்ஆற்ற
ஏனைஉலகத்தும்இயைவதால்நமக்கென
மான்அமர்நோக்கம்கலங்கிக்கையற்று
ஆனாச்சிறுமையள்இவளும்தேம்பும் (குறிஞ்சிப்பாட்டு- 13-26)

உரை: "முத்தாலும்மாணிக்கத்தாலும்பொன்னாலும்மிகுந்த நேர்த்தியாக அமைந்த நகைகள் கெடுமானால் அவற்றை மீண்டும் சீர்செய்ய முடியும் . ஆனால் தமக்குரிய சான்றாண்மையும்சிறப்பும்ஒழுக்கமும் சீர்குலைந்தால்கறை போகும்படிக் கழுவி பொலிவுள்ள புகழை மீண்டும் நிறுவுதல்குற்றமற்ற அறிவையுடைய பெரியோர்களுக்குக்கூட எளிய காரியம் என்று தொன்மையான நூலை அறிந்தோர் கூறமாட்டார்கள் . என் பெற்றோரின் விருப்பமும் எனது மடனும் ஒருசேர நீங்கிப்போகநெடிய தேரையுடைய என் தந்தையின் அரிய காவலையும் மீறி , தலைவனும் நானும்தேர்ந்து செய்துகொண்ட திருமணம் இது என்று நாம் என் தாய்க்கு அறிவுறுத்துவதால் நமக்குப் பழியுமுண்டோ? அறிவுறுத்திய பிறகுஎன்னை நான் விரும்பிய தலைவருக்கே திருமணம் செய்துதர அவர்கள் இசையவில்லை என்றால்இறக்கும்வரை நாங்கள் பொறுத்திருப்போம் . பின்னர்மறு பிறவியிலாவது நாங்கள் இணைந்திருப்போம் ."என்றுமான்கள் விரும்பும் கண்களையுடைய தலைவிகண்ணீர் மல்கிசெயலற்று ஆற்றமுடியாத துன்பத்தால் அழுகிறாள் .

**முல்லைப் பாட்டு**

முல்லைத் திணையைப் பாடியதால் முல்லைப் பாட்டு எனப்பட்டது. இல் இருத்தல். முல்லை என்பது இலக்கணம். வினைமேற் சென்ற தலைவன் வீடு திரும்பும் வரை தலைவி இல்லின் கண் இருந்து பிரிவுத்துயரை ஆற்றியிருந்த (தங்கியிருத்தல்) என்பது பொருள்.போர்மேற் சென்ற தலைவன் மழைக் கால்த்திற்குள் போரை முடித்து சென்று திரும்பி வரவேண்டும். மழைக்காலம் தொடங்கியதும் தலைவனின் வரைவை எதிர்பார்த்துத் தலைவி காத்திருக்கிறாள்.தேரின் ஒலி எதிர்பார்க்கிறாள்.

**"இன்பல் இமிழிசை ஓர்ப்பனள் கிடந்தோள்**
**அஞ்செவி நிறை ஆலின"** **(முல்லைப் பாட்டு 87 – 88)**

எனும் பகுதி காட்டுகின்றது.

**தொகுப்புரை**

சங்க இலக்கியங்கள் வீரநிலை இலக்கியம் என்றும் நல்லதையே பாடும், பேசும் இலக்கியங்கள் ஆகும்.சங்கப் பாடல்கள் எட்டுத்தொகை நூல்கள் என்றும் , பத்துப்பாட்டு என்றும் பிரிக்கப்பட்டமையையும்,அக்காலத்தில் புலவர்கள் பாடிய பாடல்கள் அகப்பாடல்கள் , புறப்பாடல்கள் என்று பிரித்து அமைக்கப்பட்டன என்பதையும் புரிந்து கொண்டோம் .

சங்க கால மக்களின் வாழ்வியல் செய்திகளைஓவியம் போல எடுத்துரைப்பன எட்டுத்தொகை நூல்கள். சங்ககால மக்கள் வீரத்தையும் ஈரத்தையும் இரு கண்களாகப் போற்றினர். காதல், பெருமிதம், நீதி முதலான உணர்ச்சிகளை எட்டுத் தொகை நூல்கள் சித்தரிக்கின்றன.

சங்க இலக்கிய நூல்களில் மன்னர்கள், குறுநில மன்னர்கள், வள்ளல்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளும், மன்னர் வாழ்த்து அமைப்பு முறை, தித்தன், மத்தி, நன்னன், கரிகாற் பெருவளத்தான் , தலையாலங்கானத்துச்செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் , போன்ற பெருநில வேந்தர்கள் பற்றியும்ஆதன்எழினி, ஆட்டனத்தி, அன்னிமிஞிலி, பாணன், பழையன் பற்றியும் எண்ணற்ற வரலாற்றுச் செய்திகளைத் தருகிறது .

**மேற்கோள் நூல்கள்**

தமிழ் இலக்கிய வரலாறு . திநகர்-, சென்னை.பக் .முல்லை நிலையம் :. பக்க எண் .43.
சங்க இலக்கியப் பதிப்புரைகள்பாரதி புத்தகாலயம்., பக்கம் 38
https://learnsangamtamil.com
https://ilakkiyam.com/iyal/1771

https://learnsangamtamil.com

http://nallakurunthokai.blogspot.com/2015/04/3.html

https://ta.wiktionary.org/wiki

https://www.msuniv.ac.in/Download/Pdf/f210a0ee3d6c493